நீலக்கடலேறி வந்து மேனிதொடும் காற்று -வான்
மீதுநிலா பால்சொரியும் நேரம் வலையேற்று
ஈழக்கடல்மீதில் எங்கும் இன்பநிலை ஆச்சு -அலை
ஏறிவந்து கொன்றபகை இன்று தொலைந்தாச்சு..
ஆ ...ஆ ..... ஆ
*வலையை வீசடா -கடல்*
*அழகைப் பாரடா -கடல்*
*புலிகள் தந்த வாழ்க்கையென்று*
*வாழ்த்துப் பாடடா*
நீலக்கடலேறி வந்து மேனிதொடும் காற்று -வான்
மீதுநிலா பால்சொரியும் நேரம் வலையேற்று

Music
காலை விடிகின்றவரையும் நீரில் மிதக்கின்றோம்
காற்றுடனே போர்தொடுத்து ஊர் திரும்புகின்றோம்
காலை விடிகின்றவரையும் நீரில் மிதக்கின்றோம்
காற்றுடனே போர்தொடுத்து ஊர் திரும்புகின்றோம்
நாங்கள் கரையேறுமட்டும் பார்த்திருப்பார் பெண்கள்
வேங்கைகளை நம்பியிங்கு தூங்குதவர் கண்கள்
*இந்த ஊரறியாதெங்கள் வேதனை -நாங்கள்*
*உண்பதுக்கெத்தனை சோதனை... சோதனை*
நீலக்கடலேறி வந்து மேனிதொடும் காற்று -வான்
மீதுநிலா பால்சொரியும் நேரம் வலையேற்று

Music
பாய்விரித்து ஓர்இரவு மீன்பிடித்தான் பிள்ளை
பத்துமாதம் போனதையா ஏன் திரும்பவில்லை
பாய்விரித்து ஓர்இரவு மீன்பிடித்தான் பிள்ளை
பத்துமாதம் போனதையா ஏன் திரும்பவில்லை
சிங்களத்துப் பேய்களினால் பிள்ளையுயிர் போச்சு
சந்ததிக்கு வாய்த்த உடல் மீனுக்கிரையாச்சு
*இது சோகங்கள் தாங்கிய தேகங்கள் -இன்று*
*சொந்தங்கள் வந்தால் சந்தோசங்கள்*
நீலக்கடலேறி வந்து மேனிதொடும் காற்று -வான்
மீதுநிலா பால்சொரியும் நேரம் வலையேற்று..
Music

அச்சமின்றி கடலில் ஏறி வாழ வைத்த புலிகள்
ஆண்டவரே அவராலே இல்லை உயிர்ப்பலிகள்
அச்சமின்றி கடலில் ஏறி வாழ வைத்த புலிகள்
ஆண்டவரே அவராலே இல்லை உயிர்ப்பலிகள்
பிச்சையின்றி வாழவகை செய்த கடற்புலிகள்
போரில்வெற்றி காணவேண்டும் நாளை இந்தஉலகில்
*நாங்கள் பாடிட மேகங்கள் ஆடுங்கள் -பிர*
*பாகரன் காலத்தைப் பாடுங்கள்... பாடுங்கள்*
நீலக்கடலேறி வந்து மேனிதொடும் காற்று -வான்
மீதுநிலா பால்சொரியும் நேரம் வலையேற்று
ஈழக்கடல்மீதில் எங்கும் இன்பநிலை ஆச்சு -அலை
ஏறிவந்து கொன்றபகை இன்று தொலைந்தாச்சு..
நீலக்கடலேறி வந்து மேனிதொடும் காற்று -வான்
மீதுநிலா பால்சொரியும் நேரம் வலையேற்று